# தமிழ் இணைய இதழ்களின் வளர்நிலை

**முனைவர் செ. செந்தில் பிரகாஷ்**
*துணை புல முதன்மையர் மொழிகள், இலக்கியம் & பண்பாட்டு நிறுவனம்,*
*விசுவ பாரதி நடுவண் பல்கலைக்கழகம், மேற்கு வங்காளம்*

**ஆய்வு அறிமுகம்**

*காலத்திற்கேற்ற கருவியான கணினி, இணையம் உலகின் அனைத்து இயக்கங்களிலும் நிலைபெற்றுள்ளன. மனித தகவல் தொடர்பின் இன்றியமையாத ஊடகமான இதழ்களும் இன்று இணைய ஏற்றம் பெற்று, பல்கிப் பெருகத் தொடங்கின. அச்சு இதழ்கள் தரும் தாக்கத்தை இணைய இதழ்கள் நிறைவு செய்கின்றனவா? அச்சு இதழ்களில் கிடைக்கப்பெறாத பல்நிலை மாற்றங்கள் இணையம் வாயிலாக இணைய இதழ்கள் பெறுகின்றன. மேற்கண்ட கருத்தாக்கங்களை முன்னிறுத்தி இவ்வாய்வு கட்டுரை அமைகின்றது. தமிழ் இணைய இதழ்களின் செயல்பாடுகள் குறித்து மதிப்பீட்டுரைக்கும் நோக்கில் **“தமிழ் இணைய இதழ்களின் வளர்நிலை”** என்னும் தலைப்பு ஏற்புடையதாகிறது. இவ்வாய்வில் இணைய இதழ்கள், மின் நூல்கள் ஆகியன முதன்மைச் சான்றாதாரங்களாகவும் இணைய ஊடகங்கள் குறித்த ஆய்வு நூல்கள், ஆய்வுக் கட்டுரைகள், இதழ்கள், ஆய்வேடுகள் முதலியன துணைமைச் சான்றாதாரங்களாகவும் திகழ்கின்றன. இணைய இதழ்களை முறைப்பட தொகுத்து, தொகுத்தவற்றைத் திறம்பட பகுத்துரைப்பதற்குப் பகுப்பாய்வு அணுகுமுறையும் விளக்கமுறை அணுகுமுறையும் இவ்வாய்வில் பின்பற்றப்பட்டுள்ளன. உலக அளவில் இணையத்தில் இயங்கி வரும் இதழ்களை மையப்படுத்தி, தமிழ் கூறும் நல்லுலகத்தின் இலக்கியப் பயன்பாட்டினை எடுத்துரைக்கும் நோக்கில் இவ்வாய்வுக் கட்டுரை அமைகிறது.*

**இணைய ஊடகங்கள்**

உலகை உள்ளங்கைக்குள் அடக்கி மனித வளர்நிலைக்கு வித்திடும் ஊடகம் இணையம். இணையம் என்ற சொல்லுக்கு பல்நிலைப் பொருட்களையும் வரையறைகளையும் கொண்டு விளங்குவர்.

**“இணையம் என்னும் சொல்லானது செப்புக்கம்பிகளினாலும் ஒளிநார் இழைகளினாலும் இணைக்கப்பட்டுள்ள கணினிவலைகளின் பேரிணைப்பைக் குறிக்கும். உலகளாவிய வலை என்பது உலகளாவிய முறையில் இணைப்புற்ற கட்டுரைகள், எழுத்துக்கள், ஆவணங்கள், படங்கள், பிறதரவுகள் முதலியவற்றைக் குறிக்கும். ……**

**….. …. மின்னஞ்சல், இணைய உரையாடல், காணொளி பார்த்தல், விளையாட்டு மற்றும் ஒரு கட்டுரையில் இருந்து மற்றொன்றுக்கு மீயிணைப்புகள் மூலம் உலவல் வழி தொடர்புப்படுத்தப்பட்ட இணையத்தளங்கள் முதலிய சேவைகளையும் உலகளாவிய வலையிலன் தரவுகளையும் இணையம் தருவிக்கின்றது”** என்று இணையம் குறித்து விக்கிபீடியா விளக்குகின்றது.

**“மற்றவர்களிடம் இருந்து புதிய தகவல்களைத் தெரிந்து கொள்ள விரும்புபவர்களும் மற்றவர்களுக்குத் தெரிவிப்பதற்கான புதிய தகவல்களை வைத்திருப்பவர்களும் கணினி மூலம்**

**தங்களுக்குள் ஒரு வலை இணைப்பை ஏற்படுத்திக் கொள்வர். இதனை இணையம் என்று அழைப்பர்"** (துரை.மணிகண்டன், 2012, ப. 62) என்று துரைமணிகண்டன் விளக்குகிறார். தமிழை முதலில் இணைய ஏற்றம் செய்த பெருமை சிங்கப்பூர் தமிழரான பேராசிரியர் நா. கோவிந்தசாமியைச் சாரும். தமிழ் இணையதளத்தின் தந்தையாகப் போற்றப்படுபவர். சிங்கப்பூர் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் நா.கோவிந்தசாமி இணைய வல்லுநர்களான இருசீனர்களுடன் இணைந்து தமிழின் முதல்பக்கத்தை ஏற்றினார்கள். 1995 ஆம் ஆண்டு முதல் தமிழ் இணைய மாநாடு, தமிழ்க்கணினி அமைப்புகளுடன் இணைந்து சிங்கப்பூரில் பேராசிரியர் நா. கோவிந்தசாமியின் தலைமையில் நடைபெற்றது. உலகளாவிய தமிழர்களின் ஒருங்கிணைவும் ஆர்வமும் மொழிப்பற்றும் தமிழை இணையத்தில் உலவச் செய்தன.

தமிழ் மொழியின் பல்வேறு இலக்கிய வடிவங்களான கவிதை, நாடகம், சிறுகதை, புதினம், கதை சொல்லி, இலக்கிய விமர்சனம், நூல் அறிமுகம், நூல் விமர்சனம், இலக்கிய விவாதங்கள் இலக்கிய கூட்டங்கள் மாநாடுகள், ஆய்வுக் கட்டுரை சமர்ப்பித்தல் என்று இலக்கியம் சார்ந்த பல்வேறு நிகழ்வுகள், பணிகள் செவ்வனே இணைய வழியில் நடைபெற்று வருகின்றன. இலக்கியம் படித்தல், கேட்டல், பார்த்தல் என்று இலக்கியத்தைப் பன்முகப்பாங்கில் நுகர இன்று இணையம் வாய்ப்பு வழங்கிவருகின்றது. அவ்வகையில் இணையம் வாயிலாக பெருகிவரும் இலக்கிய வளர்ச்சியில் இணைய இதழ்களும் முக்கிய பங்கு வகுக்கின்றன.

**இலக்கியப் பங்களிப்பு**

இணைய இதழ்களையும் அச்சு இதழ்களையும் ஒப்பிடுகையில் இணைய இதழ்கள் பொருள், காலம், பயன்பாட்டில் எளிமையாகவும் பணி வேகம் அதிகமாகவும் தகவல் பரிமாற்றம் விரைவாகவும் நடைபெற்றுவருகின்றன. அதிக பயன்பாட்டாளர்களை ஒரே தளத்தில் இணைத்து உலகளாவிய மக்களை ஒருங்கிணைத்துத் தகவல் பரிமாறும் பணியை எளிதில் இணைய இதழ்கள் மேற்கொண்டு வருகின்றன. இன்று நாளிதழ்களை அச்சுவடிவில் பயன்படுத்தும் வாசகர்களின் எண்ணிக்கை படிப்படியாகக் குறையத் தொடங்கிவிட்டன. இணையம் வாயிலாக இருந்த இடத்தில் இருந்து கொண்டே இதழ்களை வாசிப்பதற்கு வசதியாக இணைய இதழ்கள் உள்ளன. மேலும் பயன்படுத்தும் ஊடகம் இணைய இதழ்களுக்கு ஏதுவாக இருக்கின்றன. கணினி மட்டுமின்றி திறன்பேசி வழியாகவும் பேருந்தில் பயணித்துக் கொண்டும் கிடைக்கும் சிறிய ஓய்வு நேரத்திலும் படிப்பதற்கு இணைய இதழ்கள் வசதியாக உள்ளன. உள்ளங்கை கணினியாக விளங்கும் திறன்பேசியில் உடனுக்குடன் செய்திகளைப் படிப்பதற்கு இணைய இதழ்கள் எளிமையாகிக் கொண்டே வருகின்றன. அதனால் இணைய இதழ்களின் பெருக்கம் நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டே இருக்கின்றது. இன்றைய தலைமுறையினர் குறுஞ்செயலி வழியாக எளிதில் உடனுக்குடன் நடக்கும் செய்திகளை இணைய இதழின் வாயிலாக அறிந்து கொள்ள முடிகிறது, வாசகர்களின் அறிவியல் வேகத்திற்கு ஏற்ப இதழ்களும் காலத்திற்கு ஈடுகொடுத்து அச்சு ஊடகங்களில் இருந்து இணைய இதழுக்கு ஏற்ப, பல்வேறு மாற்றங்களைச் செய்யத் தொடங்கிவிட்டன. இவ்வாறு பல்கிப் பெருகி வரும்

இணைய இதழ்களை அவற்றின் உள்ளடக்கம் கொண்டும் காலத்தின் அடிப்படையிலும் வெளிவரும் ஊடகத்தின் தன்மையினைக் கொண்டும் பகுத்து ஆராயலாம்.

**தமிழ் இணைய இதழ்கள்**

இணையத்தில் மட்டும் வெளிவரும் இதழ்கள் இணைய இதழ்கள் என்று அழைக்கலாம். தமிழில் வெளிவரும் இணைய இதழ்களின் எண்ணிக்கை நாளுக்குநாள் பெருகிக் கொண்டிருக்கின்றன. அரண், அப்பால் தமிழ், ஆறாம் திணை, ஆன்மிகம், இணையத்தோழி, இன்தாம், இனம், இ.சங்கமம், ஊடறு, கீற்று, சிறகு, சொல்வனம், தமிழ் நெட் மலேசியா, தமிழ்வாணன், தமிழ் வெப்துனியா, தமிழகம், திசைகள், நிலாச்சாரல், பதிவுகள், முத்துக்கமலம், வல்லமை, வல்லினம், வார்ப்புகள், கவிமுகி, ப்ரணவ் உள்ளிட்ட இதழ்கள் இணையத்தில் மட்டும் வெளிவரும் இணைய இதழ்கள் ஆகும். இதழ்கள் தங்களுக்கென தனித்த குறுஞ்செயலியையும் வடிவமைத்து வெளியிட்டு வருகின்றன. இணைய இதழ்கள் தமிழகத்தைச் சாந்த தமிழர்களால் மட்டும் வெளியிடப்படுவதில்லை. இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், கனடா, அமெரிக்கா, இலண்டன், பாரிசு, சுவிசர்லாந்து என்று தமிழர்கள் வாழும் நாடுகள் பலவற்றில் இருந்து இணைய இதழ்கள் வெளிவருகின்றன. இவ்விதழ்கள் உலகின் பல்வேறு பகுதிகளில் வாழும் தமிழ்ப் படைப்பாளர்களையும் ஆராய்ச்சியாளர்களையும் உலகிற்கு அறிமுகபடுத்துகின்றன. உலகத் தமிழர்களை இணைக்கும் இணைப்புப் பாலமாக விளங்குவதோடு உலக அளவில் தமிழ் மொழியை வளர்க்கும் தகவல் ஊடகமாகவும் செயல்படுகின்றன.

**அச்சு - இணைய இதழ்கள்**

தினமலர், தினமணி, தினத்தந்தி, தினகரன், மாலைமலர் என்று தமிழில் வெளிவரும் பெரும்பான்மையான அச்சு இதழ்கள் அனைத்தும் இணையத்தில் வலம்வருகின்றன. இத்தகைய இதழ்கள் அச்சு - இணைய இதழ்கள் என்று அழைக்கலாம்.

"தினமலர் இணையதளம் 1998ம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. தற்போது, மாதம் 70 மில்லியனுக்கும் அதிகமான பக்கங்கள் பார்வையிடப்படுகின்றன.

- மாதம் 20 மில்லியனுக்கும் அதிகமான வாசகர்கள் பார்வையிடுகின்றனர்.
- வெளிநாடுவாழ் இந்தியர்களின் பயன்பாடு: 45.68%
- அலைபேசி செயலிகள் மூலம் பார்வையாளர்களின் எண்ணிக்கை 15 மில்லியன் / மாதம்.
- அலைபேசி செயலிகள் மூலம் பார்க்கப்பட்ட பக்கங்களின் எண்ணிக்கை 67 மில்லியன்.

நவீன தொழில்நுட்பத்தை உடனுக்குடன் கிரகித்துக்கொள்ளும் தினமலர் அச்சிதழாகவும், மின் இதழாகவும் வாசர்களுக்கு செய்திகளை அள்ளித்தருவதில் அலாதி பிரியம் கொள்கிறது.” (சதீஷ்குமார் வெங்கடாசலம், 2016, பக். 223-224) என்று தினமலர் ஆசிரியர் இணையத்தில் தினமலரின் பங்களிப்பு குறித்து விளக்குகிறார்.

அச்சு இதழைப் போன்று இணைய இதழ்களிலும் வார இதழ், மாத இதழ் காலாண்டுதழ், அரையாண்டு இதழ் போன்ற பகுப்புகள் காணப்படுகின்றன.

- வாரம்தோறும் புதுப்பிக்கப்படும் இணைய இதழ்களுள் ஒன்று திண்ணை இதழ். அரசியலும் சமூகமும், அறிவியல் தொழில் நுட்பம், இலக்கியக் கட்டுரைகள், கடிதங்கள், அறிவிப்புகள், கதைகள், கலைகள், சமையல், கவிதைகள், நகைச்சுவைகள் உள்ளிட்ட கூறுகளுடன் திண்ணை இதழ் இயங்குகிறது. உலக அளவில் தமிழ்சார் தகவல்களை வழங்குவதில் திண்ணை முதன்மை பெறுகிறது.
- இணைய இதழ்கள் மட்டுமின்றி அச்சில் வெளிவரும் நக்கீரன், ஆனந்த விகடன் உள்ளிட்ட வார இதழ்கள் இணையத்திலும் பதிவேற்றம் செய்யப் பெறுகின்றன.
- இணையத்தில் வெளிவரும் இதழ்களான பதிவுகள், வரலாறு முதலான இதழ்கள் மாதந்தோறும் வெளிவருகின்றன.
- பதிவுகள் கனடாவில் இருந்து வெளிவரும் தமிழ் இணைய இதழ். ஆன்மிக நோக்கில் தமிழர்களின் வரலாறு, கோவில், கொடைச் சிறப்புகளையும் சேர, சோழ, பாண்டியர்களின் வரலாற்றையும் ஆன்மிகச் சுற்றுலா குறித்து வரலாறு இணைய மாத இதழ் செய்திகளைத் தொகுத்தளிக்கின்றது.

**முத்துக்கமலம்**

- மாதம் இருமுறை புதுப்பிக்கப்படும் இணைய இதழ் ஆகும். முத்துக்கமலம் இதழ், தேனி மு. சுப்பிரமணி என்பவரால் நடத்தப்படும் இணைய இதழ் ஆகும். இது 2006 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இணைய இதழ். ஆன்மிகம், ஜோதிடம், பொன்மொழிகள், பகுத்தறிவு, அடையாளம், நேர்காணல், கதை, கட்டுரை, கவிதை, குட்டிக்கதை, குறுந்தகவல், சிரிக்க சிரிக்க, சிறுவர் பகுதி, மகளிர் மட்டும், சமையல், மருத்துவம், புத்தகப்பார்வை, சுவையான தகவல்கள், சுற்றுலாத் தளங்கள், மின் புத்தகங்கள், தமிழ் வலைப்பூக்கள், தேன்துளிகள், படைப்பாளர்கள், தினம் ஒரு தளம் முதலான பகுதிகளை உள்ளடக்கமாய்க் கொண்டு இயங்குகின்றது. தொடக்கத்தில் காலாண்டு இதழாக இயங்கி வந்த இவ்விதழ் தற்போது மாதம் இருமுறை வெளிவருகின்றது.

**அரண்**

- அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ் மாதந்தோறும் வெளிவருகிறது. கல்வெட்டு, ஓலைச்சுவடி, பண்டைய வரலாற்றுத் தகவல்களைப் புதிய நோக்கில் ஆய்ந்துரைக்கும் இதழாக இவ்விதழ் திகழ்கிறது.

**இனம்**

- இனம் பன்னாட்டு இணையத் தமிழாய்வு இதழ் வணிக நோக்கின்றி ஆய்வு நோக்கில் இயங்கும் இதழாகும். மே மாதம் 2015 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இவ்விதழ் காலாண்டு இதழாக இணையப் பதிப்பில் வெளிவருகின்றன. தமிழியல் ஆய்வுக் கட்டுரைகளை மையப்படுத்தி இயங்கும் இதழாகத் திகழ்கிறது.

ஒவ்வொரு இதழும் ஒருவகையான தனித்தன்மையினை மையமிட்டு இயங்கும். அவ்வாறு இதழ்கள் பெற்றுள்ள தன்மையின் அடிப்படையில் அச்சு இதழ்களைப் போன்று இணைய இதழ்களிலும் உள்ளடக்கத்தை ஆராய்வதற்கான களங்கள் உள்ளன. அனைத்துக் கூறுகளும் அடங்கிய பொது இதழ்கள் பரவலாகக் காணப்படுகின்றன. தனித்தன்மையுடன் இயங்கும் இதழ்களின் எண்ணிக்கை குறைவாகவே உள்ளன.

**நிறைவுரை**

காலத்திற்கேற்ற மாற்றங்களாய் அச்சுக்கலையில் மாபெரும் வளர்ச்சி பெற்ற ஊடகமான இதழ்கள், இணையத்தில் மக்கள் ஊடகமாய் வலம்வரத் தொடங்கின. அச்சு இதழ்கள் தொடங்குவதற்கு பல்வேறு படிநிலைகள், பொருளாதார நிலை, நிறுவனம், இடம், இயந்திரம், பணிநேரம், ஊழியர்கள், அரசு அங்கீகாரம் என்று பல்நிலைகள் உள்ளன. ஆனால் இணைய ஊடகத்தைத் தொடங்குவது மிகவும் எளிது. வழிநடத்திச் செல்வதும் இயங்கும்முறையும் முற்றிலும் எளிதாகும்.

பொருளாதாரச் செலவு என்று நோக்கினால் அச்சு இதழ்களில் இடம், ஊழியர்கள், அச்சுத் தொழிலுக்கான செலவுகள் அதிகமாகும். இணைய இதழ்களில் இணையத்தள முகவரிக்கான செலவு, கணினிப் பயன்பாடு பற்றிய செலவுகளைத் தவிர மற்றவை இணைய இதழுக்கு இல்லை. பக்க வரையறை, படங்கள் இணைப்பு வரையறை முதலியன இணைய இதழில் கிடையாது. தொடர்ச்சி, மேலும் என்னும் வசதியின் வாயிலாக தொடர்ச்சியாகப் பக்கங்களையும் பல்வேறு படங்களையும் அதிக அளவில் இணைப்பது எளிது. வெளிவந்த இதழில் ஏதேனும் பிழைகள், கருத்து முரண்கள், தவறான பதிவுகள் இருப்பின் காலந்தாழ்த்தாது உடனடியாகத் திருத்தும் வாய்ப்பு இணைய இதழ்களில் உண்டு. இடைச்செருகல் - பிழை நீக்கும் வசதி மிக எளிதாகச் செய்ய இயலும்.

இணைய இதழ்களிலும் பொதுவாக இயங்கும் இதழ்கள் மட்டுமின்றி தனித்தன்மையுடன் ஏதேனுமொரு உள்ளடக்கத்தை மையமிட்டு இயங்கும் இதழ்களில் இலக்கியத்திற்கான இதழ்கள் முக்கியப் பங்கு வகிக்கின்றன காணப்படுகின்றன. இலக்கியத்துடன் கூடி அரசியல், சமுதாயம், அறிவியல், கலைகள், பெண்கள், என்று பல்வேறு தன்மையில் இலக்கிய இதழ்கள் வெளிவருகின்றன. இலக்கியத்தில் இளம் தலைமுறையினர் ஈடுபடுத்துவதில் இணைய இதழ்கள் முக்கிய இடம் வகிக்கின்றன. ஒரு சிலரால் மட்டுமே இதழ்கள் தொடங்கும் நிலை மாறி இலக்கிய ஆர்வம் உள்ள, அர்ப்பணிப்பு மிகுந்த, இளம் தலைமுறையினர் இதழாளர்களாய் பரிணமிக்க இணைய இதழ்கள் உறுதுணைபுரிகின்றன. தமிழ் மொழியின் இலக்கியப் பாதையில் இணைய இதழ்களின் வழித்தடம் இன்றியமையாததாகும்.

**பயன்பட்ட நூல்கள்**


1. இலட்சுமி, கா. (2020). தமிழ் இணைய ஊடகங்கள் - ஒரு மதிப்பீடு, முதுமுனைவர் பட்ட ஆய்வேடு, காந்திகிராம கிராமிய நிகர்நிலைப் பல்கலைக்கழகம், காந்திகிராமம்.
2. குமரன், எஸ். (2016). 21ஆம் நூற்றாண்டில் தமிழ் இணைய பதிப்புக்குழு மேம்பாடும் பயன்பாடும், உலகத் தமிழ்க் காப்பிய ஆராய்ச்சி நிறுவனம், கோலாலம்பூர், மலேசியா.
3. பாலசுப்பிரமணியன், சி. (2011). தமிழ் இலக்கிய வரலாறு, பாரி நிலையம், சென்னை, மறு பதிப்பு.
4. பொன்னவைக்கோ, மு. (2010). இணையத் தமிழ் வரலாறு, பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சி.
5. மணிகண்டன், துரை. (2011). இணையத்தில் தமிழ்த் தரவுத் தளங்கள், கௌதம் பதிப்பகம், சென்னை.
6. மணிகண்டன், துரை. (2012). தமிழ்க் கணினி இணையப் பயன்பாடு, கமலினி பதிப்பகம், கச்சமங்கலம்.